DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure.)

**IN THE COURT OF VI ADDITIONAL SESSIONS JUDGE**
**S.C.**No. 387/2019 dated:11.12.2025

**Deposition of witness for P.W.13**

Name : திருமதி நளனி நடராஜன்
Father's name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 11th day of December 2025.

( எதிரி ஆஜர்.)

முதல் விசாரணை(அரசு தரப்பில்) –

நான் தற்போது சென்னை தடயஅறிவியல் துறை இயற்பியல் பிரிவில் உதவி இயக்குநராக பணியாற்றி வருகிறேன். கடந்த 21.03.2019 அன்று 23 வது பெருநகர நடுவர் சைதாப்பேட்டை அவர்களின் 20.02.2019 நாளிட்ட வேண்டுகோள் கடிதத்துடன், குமரன் நகர் காவல்நிலைய குற்ற எண்.1207/2018 வழக்கில் சம்மந்தப்பட்ட வழக்கு பொருட்கள் காவலர் (37426) திரு. சத்திராஜ் என்பவர் மூலமாக எங்களது அலுவலகத்திலுள்ள மானுடவியல் பிரிவில் ஆய்வுக்காக பெறப்பட்டது. மானுடவியல் பிரிவில் ஆய்வுக்கு பிறகு Anthro 55/2019 அறிக்கையில் விவரித்துள்ள CD/DVD ஆன பொருட்கள் 1 மற்றும் 2 எங்களது பிரிவில் மேலும் ஆய்வுக்காக

18.06.2019 அன்று பெறப்பட்டது. CD/DVD களான பொருள் 1 மற்றும் 2ல் உள்ள வீடியோ பதிவுகளில் உண்மை தன்மை கண்டறியும் பொருட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. CD/DVD பொருள் 1 மற்றும் DVD கள் பொருள் 2ல் தலா ஒரு வீடியோ பதிவு காணப்பட்டது. அவற்றின் கால அளவு, நடக்கக்கூடிய நிகழ்வு எங்களது அறிக்கையில் பத்தி எண் 2.1ல் வழங்கியுள்ளோம். இரண்டு வீடியோ பதிவுகளும் ஒரே நிகழ்வை வெவ்வேறு கோணத்தில் பதிவாகி இருப்பது காணப்பட்டது. மேலும் இரண்டு வீடேியோ பதிவுகளுக்கும் இடையில் timestamp ல் 6 நிமிடம் வித்தியாசம் காணப்பட்டது. இந்த வித்தியாசம் digital video recorder ல் உள்ள time setting ல் உள்ள வித்தியாசத்தால் இருக்க கூடும். மேற்கூரிய வீடியோ பதிவுகளை Amped–FIVE (Forensic image and video enhancement) என்ற மென்பொருளை பயன்படுத்தி ஆய்வு செய்ததில் அவை ஒவ்வொன்றும் timestamp, நிகழ்வு மற்றும் அதன் பிண்ணனி சூழலில் உள்ள தொடர்ச்சியை காண்பித்தது. மேலும் Histogram, Resolution மற்றும் ஒளியின் நிலை போன்ற அம்சங்களில் அருகில் உள்ள frame களுடன் ஒத்துபோனது. இவை வீடியோ பதிவுகளில் உண்மை தன்மை மற்றும் அதில் எவ்வித digital கையாளுதல் இல்லை என்பதை குறிக்கிறது.

<u>கருத்துரை</u>

CD/DVD ஆன பொருள் 1 மற்றும் DVD கள் ஆன பொருள் 2 காணப்படும் வீடியோ பதிவுகள் அனைத்தும் எவ்வித digital கையாடுதலும் இல்லாத உண்மையான வீடியோ பதிவுகள் ஆகும் என கருத்துரை வழங்கினேன். 26.06.2019 நாளிட்ட எங்களது அறிக்கை PHY58/2019 ல் வழங்கியுள்ளோம். மேற்படி அறிக்கையை 05.07.2019 தேதியிட்ட covering letter மூலம் நீதித்துறை நடுவருக்கு அனுப்பியுள்ளோம். நான் வழங்கிய

எனது கருத்துரை அடங்கிய 26.06.2019 தேதியிட்ட PHY58/2019 என்ற அறிக்கை அ.த.சா.ஆ.9 ஆகும். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்):–</u>

நான் ஆய்வறிக்கையில் குறிப்பட்ட விவரங்களை போலீசார் விசாரிக்கும்போது தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். காவலர் சத்திராஜ் பொருள் நான் ஆய்வுசெய்த பொருள் 1 மற்றும் 2 ஆகியவற்றை என்னிடம் நேரடியாக ஒப்படைத்தாரா என்றால் கிடையாது. அவை மானுடவியல் பிரிவில் ஆய்வு முடித்து, பின்னர் எங்கள் துறையின் ஆய்வுக்கு அனுப்பப்பட்டது. தடய அறிவியல் துறையின் இயற்பியல் துறையில் உதவி இயக்குநராக பணியாற்றி வருகிறேன். என்னிடம் சமர்பிக்கப்பட்ட பொருட்களில் Digital கையாளுதல் (morphing மற்றும் editing) நிகழ்ந்துள்ளதா என கண்டறிவது ஆகும். உண்மை தன்மை கண்டறிதலில் மேற்கண்டவைகள் நிகழ்ந்துள்ளதா என பார்ப்பது எங்கள் துறையின் கடமையாகும். எங்களது பணியான உண்மை தன்மையை கண்டறிதலில் கால நிர்ணயம், பதிவான காட்சிகளின் கால அளவு ஆகியவை வராது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அறிக்கையில் கால அளவுகளை குறிப்பிட்டு உள்ளேனா என்றால் குறிப்பட்டுள்ளேன். நான் ஆய்வு செய்த பொருள் 1,2 ஆகியவற்றில் வாகண இரைச்சலோ அல்லது பேச்சு குரல்களோ இருந்ததா என்றால் இல்லை. நான் போலீசார் விசாரிக்கும்போது sequence of events and background noise within them என கூறியுள்ளேன் என்றால் குறிப்பிட்டுள்ளேன். background noise என்பது இரைச்சலை குறிக்காது, ஆனால் அது video signals ல் இருக்கும் noise என்பதை குறிக்கும். இந்த

விளக்கத்தை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் ஆய்வு செய்த பொருள் 1,2 ல் உள்ள காட்சி பதிவுகள் மைக் உள்ள கேமராவில் பதிவு செய்யப்பட்டவையா அல்லது மைக் இல்லாத கேமராவில் பதிவுசெய்யப்பட்டவையா என்றால் அது பற்றி குறிப்பிட்டு சொல்ல இயலாது. ஆனால் நான் ஆய்வு செய்த பொருள் 1,2 ல் audio component இல்லை. நான் ஆய்வு செய்த பொருள் 1,2 ல் உள்ள பதிவுகள் பக்கவாட்டில் இருந்த பதிவு செய்யப்பட்டவையா, நேர் எதிரே இருந்து பதிவு செய்யப்பட்டவையா அல்லது மேலே இருந்து பதிவு செய்யப்பட்டவையா என்றால் அவை கொஞ்சம் உயரத்திலிருந்து எடுக்கப்பட்டவை ஆகும். நான் ஆய்வு செய்த காட்சிகளில் தாக்கிய நபர் எவ்விதமான ஆடை அணிந்து இருந்தார் என்றால் t–shirt with horizontal stripes and bermudas pant ஆகிய உடைகளை அணிந்து இருந்தார். நான் வழங்கி உள்ள ஆய்வு அறிக்கையில் சம்பவ இடத்தின் எதிரில் வரிசையாக கடைகள் இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எத்தனை கடைகள் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பொருள் எண் 1 ல் உடைகள் black and white ல் தெரிந்தது. கலர் mode ல் இருந்தாலும் கூட இரவில் பதிவாகும் சமயங்களில் வண்ண உடைகள் கூட black and white ஆக தெரியும். பொருள் எண் 2 ல் வாயிலாக stripes ஆனது green, white, red and dark color என தெரியவந்தது. இந்த விசயத்தை போலீசார் விசாரிக்கும் போதோ, எனது அறிக்கையிலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது அறிக்கையின் படி பொருள் 1,2 ல் உள்ள பதிவுகள் பல்வேறு கோணங்களில் எடுக்கப்பட்ட பதிவுகளா என்றால் இரண்டு கோணங்களில் எடுக்கப்பட்ட பதிவுகள் ஆகும். பொருள் எண் 1,2 ல் உள்ள பதிவுகளின் படி அந்த பதிவுகளின் கால நேரம் சுமார் 6 நிமிடங்கள் என்றால் சரியல்ல.

பொருள் எண்1ல் உள்ள பதிவுகள் 21 நிமிடம் 54 வினாடிகள் கொண்டதாக இருந்தது. பொருள் எண் 2ல் இருந்த பதிவுகள் 27 நிமிடம் 02 வினாடிகள் ஆக இருந்தது. பொருள் எண் 1ல் உள்ள பதிவுகள் 23:48:21 முதல் 00:10:15 வரை பதிவான காட்சிகள் என குறிப்பிட்டுள்ளேன். தள்ளப்பட்டதாக சொல்லப்படும் நேரம் குறித்து குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் அதை பற்றி சொல்லவில்லை. சம்பவ இடத்திற்கு எதிரே வரிசையாக கடைகள் இல்லை என்றும், பூங்கா மட்டும் உள்ளது என்றும் சொன்னால் நான் ஆய்வு செய்த பொருள் 1,2ல் உள்ள பதிவுகளின் படி சரியல்ல. உண்மையில் சம்பவ நடந்ததாக சொல்லபடும் இடத்திற்கு எதிரே பொருள் 1,2ல் உள்ள பதிவுகளில் கண்டதுபோது வரிசையாக கடைகள் இல்லை என்றும், பூங்கா உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. கால அளவில் 6 நிமிடம் வித்தியாசம் இருந்ததற்கான காரணத்தை எனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் அதற்கான விளக்கத்தை கொடுத்துள்ளேன். எனது விளக்கம் அனுமானத்தின் அடிப்படையில் உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. நான் ஏற்கனவே காவலர்கள் தங்கள் வசதிக்கேற்ப உருவாக்கம் செய்த கொடுத்த பதிவுகளை ஆய்வு செய்து அதற்கு ஏற்றவாறு அறிக்கை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Dt.11.12.2025 VI Additional Sessions Judge